# இரட்சிப்பு


RATCHIPPU

RATCHIPPU = SALVATION


Volume-12 | February-2023 | Issue-09

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-


**நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள். யோவேல் 2:13**



## இயக்குநர் கடிதம்... From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!
இயேசுவின் இனிய திருப்பெயரில் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

'தபசுக் காலம்-2023' இம்மாதம் 22ம் நாள் சாம்பல்-புதன் அன்று தொடங்குகிறது. 'லெந்து-காலம்' எனப்படும் இந்த தவக்காலத்தில் நம்மை சுயபரிசோதனை செய்து நாம் 'ஒன்றும் இல்லை' என்பதை உணர்ந்தவர்களாக நம்மை நாமே வெறுமையாக்கி கிறிஸ்துவின் சிலுவைப் பாதையில் நடக்க நம்மை அர்ப்பணிப்போம். கொரோனா தொற்றின் அனைத்து வடிவங்களையும் முறியடிக்கும் நோய் எதிர்ப்பு சக்தியை நமக்கு தந்ததற்காக கர்த்தருக்கு கோடாகோடி நன்றிபலிகளை செலுத்துவோம். கோவிட்-19 இன்னமும் முற்றிலுமாக அழிக்கப்படவில்லை என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ள நிலையில், நாம் சுகாதார நெறிமுறைகளை கடைபிடித்து ஆரோக்கியம் காத்திடுவோம். தமிழ்நாட்டில் மதவெறி மற்றும் பிரிவினைவாத கலச்சாரம் வேரறுக்கப்பட இரட்சிப்பு குடும்பத்தாராகிய எங்களுடன் இணைந்து ஜெபித்திடுங்கள்.

நமது ஊழிய இயக்குநரின் இம்மாத ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். பத்திரிக்கை ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், வலை தள ஊழியங்கள் (WEBSITE ADDRESS: www.ratchippu.in/ratchippu.in), NMS-MISSIONARY ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் ஆகிய நமது அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். 'ஜெப-ஜன்னல்' ஜெபங்கள் (பிப்ரவரி 10, 17, 24), 'அனைவரும்-ஊழியத்தில்' - கைபிரதி ஊழிய திட்டம் ஆகியவற்றில் பங்குபெற அனைவரையும் அழைக்கிறோம். வேதாகம போட்டிக்கான பதில்கள், ஜெப-குறிப்புகள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கை அனுப்புவோர் ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம் பக்கம் 7-ல்). தேவசமாதானம் நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்கள் உடன் ஊழியன்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

**வேத-வரிகள்-146** **யோவேல் 2:13**

# தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

### சத்திய வேதம் (ரேனியஸ்-1840)

உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்க ளைக் கிழித்து, பராபரனாகிய கர்த்தரண்டை திரும் புங்கள்; அவர் இரக்கமுமனவுருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவருந் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார்.

### பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)

உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்க ளைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும் புங்கள்; அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார்.

### திருவிவிலியம் (பொது-1995)

உங்கள் உடைகளையல்ல, உங்கள் இதயத்தை கிழித்துக்கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்புங்கள். அவர் அருள் நிறைந்தவர், இரக்கமும் நீடிய பொறுமையுள்ளவர், பேரன்பு மிக்கவர்; செய்யக் கருதிய தீங்கைக் குறித்து மனம் மாறுகின்றவர்.

### பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)

உங்கள் ஆடைகளையல்ல, உங்கள் இதயத்தை கிழியுங்கள். உங்கள் தேவனாகிய கர்த்ரிடம் திரும்புங்கள். அவர் இரக்கமும் கருணையும் அன்பும் உள்ளவர். விரைவாக கோபப்படாதவர். அவர் தர எண்ணியிருந்த தண்டனையிலிருந்து மனம் மாறுவார்.

வசன தியானம் - 139

# ஆடைகளையல்ல... இதயத்தை!

## உடல்மொழியால் அல்ல... உள்ளத்தின் நிறைவால் மனந்திரும்புவோம்

Joe-2:13

யோவேல்-2:13

உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களை கிழித்து, தேவனாகிய கர்த்தரிடத் தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மனவுருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையும் உள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார். யோவேல்–2:13

உண்மையான மனந்திரும்புதலை அடைய உதவும் வகையில் யோவேல் பயன் படுத்திய வார்த்தைகள் இவை (யோவே-2:13). ஆடையைக் கிழிக்கும் எபிரேய வழக்கம் பொதுவான துக்கம், பயங்கரம் அல்லது திகில் போன்ற அசாதாரண உணர்ச்சியின் வெளிப்பாடாக இருந்தது. நாமும், நம்முடைய பரிசுத்த தேவனுக்கு விரோதமாக பாவம் செய்யும்போது துக்கமடைந்து திகிலடைய வேண்டும். ஆனால், நாம் ஆடைகளை கிழிக்கவோ அல்லது மாற்றுவதற்கோ பதிலாக, நமது இதயத்திலும் உள்ளத்திலும் அப்படி செய்து கொள்ளும்படி நம்மிடம் வேண்டி, மனந்திரும்புதலுக்கான கடவுளின் அழைப்பை யோவேல் விடுக்கிறார்.


மனந்திரும்புதல் என்பது நம் பாவத்திற்காக வருந்துவதோடு, நம் இதயத்தையே கடவுளுக்குத் தருவதாகும், உண்மையான மனந்திரும்புதல் அடைவதற்கு நமது இதயத்தில் 99-சதவீதம் கொடுப்பதும் போதாது. மாறாக, ஒரு சிறு பகுதியைக்கூட நாம் எடுத்துக்கொள்ளாமல் 100-சதத்தையும் கடவுளுக்குக் கொடுப்பதாகும்.

உண்மையான மனந்திரும்புதல் வாயிலாக முழுமையான பரிசுத்தத்தை நாம் பின்பற்றவேண்டும் என்று கடவுள் விரும்புகிறார். ‘‘அவர் பரிசுத்தராக இருப்பதால் நாம் பரிசுத்தமாக இருக்க வேண்டும்’’ (1பேது-1:15,16). ஆனால் பவுல் கூறுவது போல், நாம் மனந்திரும்புதலில் இன்னும் முழுமையடையவில்லை. ‘‘நான் அடைந்தாயிற்று. நான் முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல்...’’ (பிலி-3:12,13,14). கர்த்தருடைய இரக்கத்திற்காகவும் கிருபைக்காகவும், கிறிஸ்து வின் தியாகத்திற்காகவும் நன்றி செலுத்துவோம். இது நமது பாவங்களுக்குப் பரிகாரம் செய்து, கடவுளின் நீதியை நமக்கு அணிவிக்கிறது.

எனவே, நம் இதயத்தில் என்னென்ன மாற்றங்கள் வேண்டும் என்பதை உணர்ந்த வர்களாக நம்மை முழுமையாகக் கடவுளுக்குக் கொடுக்கத் தயாராவோம்.

‘‘கர்த்தருக்கு தம் முழு இருதயத்யையும் அர்ப்பணிப்பவர்களுக்கு தமது வல்லமையைத் தர கர்த்தர் கண்ணோக்கமாய் இருக்கி றார்.’’ (2நாளா-16:9) என்பதை நினைவில் கொள்வோம்.


நம் விசுவாசத்தை வெளிப்புற அடையாளம் ஆக்காமல், ‘‘கர்த்த ருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வரும் முன்னே (யோவே-2:28-32) நம் இருதயத்தை நமக்குள் வாழும் ஆவியானவரிடமாய் திருப்புவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.



அருட்திரு. தர்மராஜா

படைப்பு: REV. SJD. தர்மராஜா, ஆயர் & அபிவிருத்திச் செயலர், இந்திய சுதேச மிஷனரி சங்கம், சென்னை.
REV. SJD. DHARMARAJA, PRESBYTER & HON. PROMOTIONAL SECRETARY, NATIONAL MISSIONARY SOCIETY OF INDIA

சாம்பல்-புதன் சிறப்பு தேவசெய்தி...



அருட்திரு. தர்மராஜா

பாவி மனந்திரும்பும்போது
கடவுள் மனமிரங்குகிறார் - யோவேல் 2:12-19

# சாம்பல் புதன் வீட்டை சுத்தம் செய்வதற்கான நேரம்

நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள். யோவேல் 2:13மு

**Rev. S.J.D. Dharmaraja**
PRESBYTER AND MISSION DIRECTOR, GOOD TIDINGS BIBLE PRINTS MINISTRIES,
SALIGRAMAM, CHENNAI, SOUTH INDIA

இந்த ஆண்டின் சாம்பல்-புதன் (தபசுக்காலத்தின் முதல் நாள்) இம்மாதம் 22ம் நாள் ஆகும். நாம் நம் வீட்டைப் இன்று பூட்டிவிட்டு 5-ஆண்டுகளுக்குப் பிறகே திரும்பி வரப்போகிறோம் என வைத்துக்கொள்வோம். 2028ம் ஆண்டு நாம் திரும்பி வரும்போது நம் வீடு எப்படி இருக்கும்? வீடு முழுவதும் தூசு மற்றும் மாசு நிறைந்திருக்கும். வேலிகளில் புல்-செடிகள் வளர்ந்து கிடக்கும். வீட்டின் சுவர் முழுதும் பூஞ்சை திட்டுகள் இருக்கும். மின்சாரம் இன்றி வீடு இருளில் மூழ்கிக் கிடக்கும். சுருங்கச் சொன்னால், நம் வீடு பாழடைந்து, சீரிழந்ததாகக் காணப்படும். இதே செய்தியைத்தான் சாம்பல் புதனை ஆசரிக்கும் நமக்கு திருமறை தெரிவிக்கிறது. கடவுள் நம்மிடம் மனமாற்றத்தை எதிர்பார்க்கிறார். நம்மில், உள்ளான மாற்றங்கள் இல்லை என்றால், நம் வாழ்வு பயனற்றது என்பதை உணர அழைக்கப்படுகிறோம்.

1. கடவுளிடம் மனந்திரும்ப அழைப்பு: நான் சொன்ன, 5-ஆண்டுகள் பராமரிக்கப் படாத வீடு நீங்கள்தான் (கடவுளின் வீடாகிய நீங்கள்தான்). உங்கள் வாழ்வை சற்றே சீர்தூக்கிப் பாருங்கள்: கடந்த காலங்களில், நீங்கள் கடவுளுடைய விஷயங்களிலா? உலக விஷயங்களிலா? எதில் அதிக ஆர்வம் காட்டியிருக்கி றீர்கள்? கர்த்தர் உங்கள் இதயத்தில் முதலிடம் பிடித்திருக்கிறாரா? அல்லது உலக காரியங்களான பண-ஆசை, தீய-நண்பர்கள், தொலைக்காட்சி, ஸ்மார்ட்-போன் ஆகியவை முதலிடம் பிடித்திருக்கின்றனவா? இன்று நம்மை சுய-பரி சோதனை செய்வோம். கடவுளின் வீடாகிய நாம் நன்கு பராமரிக்கப்பட்ட வலுவான-அழகான கட்டிடமாய் இருக்கிறோமா? அல்லது பழுதுபட்டு, மாசு நிறைந்த கட்டிடமாய் இருக்கிறோமா? உண்மையில் நாம் நம் இதயத்தில் பிசாசுக்கு இடம் தந்து, அற்ப-விசுவாசிகளாக, ஆவியில் அனல்-அற்றவர்களாக மாறிவிட்டிருக்கிறோம். இந்த ஆண்டு சாம்பல்-புதன் ஆசரிப்பு நமது இதயமாகிய வீட்டைச் சுத்தம்

செய்ய சரியான நாள். யோவேல்-2:13 நமக்குச் சொல்லுவது, ‘‘கர்த்தரிடத்தில் திரும்புங்கள்’’ என்பதாகும். ஒருவேளை நாம் கடவுளைவிட்டு விலகியிருந்தாலோ, அவரைத் தீவிரமாகப் பின்தொடரவில்லை என்றாலோ கடவுள் இன்று, ‘‘மனந்திரும்புங்கள்’’ என்று அழைக்கிறார்.

யார், யாரெல்லாம் கடவுளிடம் திரும்பவேண்டும்? நம்மில் யாராவது, ‘கடவுளிடம் திரும்ப வேண்டிய அளவு நான் மோசம் இல்லை.’ என்றோ அல்லது, ‘என்னை முழுவதுமாக கடவுளுக்கு ஒப்புக்கொடுக்க எனக்கு நேரமில்லை’ என்றோ கூறினால் அந்த சாக்கு-போக்குகள் கடவுளிடம் செல்லுபடி ஆவதில்லை. அனைவரும் மனந்திரும்பவேண்டும் என அவர் நமக்குக் சொல்லுகிறார்.

‘‘ஜனத்தைக் கூட்டுங்கள், சபையைப் பரிசுத்தப்படுத்துங்கள்; முதியோரைச் சேருங்கள், பிள்ளைகளையும் பாலுண்கிற குழந்தைகளையும் கூட்டுங்கள்; மணவாளன் தன் அறையையும், மணவாட்டி தன் அறையையும் விட்டுப் புறப்படுவார்களாக.’’ (யோவே-2:16) என்கிறார் கர்த்தர். கடவுள் இங்கு அனைவரையும் மனந்திரும்ப அழைக்கிறார், தேவாலய ஊழியர்களைக்கூட! (யோவே-2:17). எனவே, மனந்திரும்புதல் தேவ-ஊழியர்களுக்கும் அவசியம்!

கடவுளிடம் திரும்புவது எப்படி?

‘‘உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயத்தைக் கிழித்து திரும்புங்கள்’’ என கடவுள் கூறுகிறார் (யோவே 2:13). பழைய ஏற்பாட்டின் நாட்களில், மக்கள் பாவம் செய்தபோது தங்கள் ஆடை களைக் கிழித்து, தங்கள் தலையில் சாம்பலைப் போட்டுக்கொண்டு சோகமாக தோற்றமளிப்பர். பின்னர், மீண்டும் அதே பாவங்களுக்குத் திரும்புவர்.

சுருங்கச் சொன்னால், அவர்கள் பேண்ட்-எய்ட் மூலம் புற்றுநோயைக் குணப்படுத்த முயன்றனர். கையில் புற்றுநோய் கட்டி இருந்தால், நான் அதன் மேல் ஒரு பேண்ட்-எய்ட் போடலாம். ஆனால் அடிப்படை பிரச்சனை அதனால் தீர்க்கப்படாது. இந்த தவக்காலத்தில் நெற்றியில் சாம்பலைப் பூசுவது, உண்ணா நோனபு இருப்பது, தேவ-செய்திகளைக் கேட்பது, சோகமாக பாடல்களைப் பாடுவது என நாம் செய்யும் வெளிப்புற காரியங்கள் நல்ல விஷயங்கள்தான். ஆனாலும், மனந்திரும்பாமல் நம் பழைய வாழ்க்கைக்கு மீண்டும் திரும்புவதால் பயன் என்ன?

‘‘உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடம் திரும்புங்கள்’’ (யோவே-2:12பி) என்று அழைக்கும்போது, நம் வாழ்வு நிறைவாழ்வாக மாற கர்த்தர் விரும்புகிறார்.

நம்முடைய ஒரு-நாளில், சில-மணி நேரத்தை மட்டுமல்ல 24-மணி நேரத்தையும், நமது ஒரு-வாரத்தில் ஒன்றிரண்டு நாட்களை அல்ல, 7-நாட்களையும் ஆண்டவர் தமக்காக கேட்கிறார். மனந்திரும்புதல் என்பது, இதயத்தில் உண்மையான துக்கத்துடன் தொடங்கும் முழு அர்ப்பணிப்பாக இருக்க வேண்டும். அதுவே, ‘‘முழு இருதயத்தோடும் கர்த்தரிடம் திரும்புதல்.’’

95-ஆய்வறிக்கைகளை நீங்கள் படித்திருக்கிறீர்களா? மார்ட்டின் லூதர் விட்டன்பெர்க் கோட்டை-தேவாலயக் கதவில் அறைந்த அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்ன?

‘‘இயேசு கிறிஸ்து, ‘மனந்திரும்புங்கள்’ (மத்-4:17) என்று கூறியபோது, விசுவாசிகளின் முழு வாழ்க்கையும் மனந்திரும்புதலாக இருக்க அவர் விரும்பினார்’’ என்பதே அதன் சாராம்சமாகம். நேர்மையான

மனந்திரும்புதல் என்பது வாழ்நாள் முழுதும் செய்யப்படும் ஒரு செயல்முறை ஆகும்.'' என்று சொன்னதை நினைவில் கொள்வோம்.

2. மனிதருக்கு மனமிரங்க கடவுளின் உறுதியளிப்பு:

சாம்பல் புதனை முன்னிட்டு இதய-வீட்டை சுத்தம் செய்வதைப் பற்றி பேசுகி றோம். நாம் கடவுளிடம் வரும்போது அவர் நமக்கு அற்புதமான ஒன்றை செய்கிறார். அதாவது, பாவி மனந்திரும்பும்போது கடவுள் மனமிரங்குகிறார். ''கர்த்தர் இரக்கமும், மனவுருக்கமும், நீடியசாந்தமும், மிகுந்த கிருபையும் உள்ளவர் (யோவே-2:13பி). இதுவே, மனமிரங்கும் கடவுள் அளிக்கும் உறுதிமொழி.

நாம் ஒரு குற்றவாளி என்பது நிச்சயமாய் தெரிந்தபோது, ''நீங்கள் நிரபராதி!'' என்று நீதிபதி கூறினால் அது எத்தனை மகிழ்ச்சியான ஒன்று? அவ்விதமாகவே, மனமிரங்கி நம் தவறுகளை மன்னிக்கிற கடவுள், நமக்கு தண்டனை விதிக்காத நீதிபதி ஆவார். இந்த தவக்காலத்தில் சிலுவையை நோக்கி நாம் அடியெடுத்து வைக்கும்போது, நம்மை 'நிரபராதி' என்று கடவுள் அறிவிக்கிறார்.

தவக்காலத்தில் செய்ய வேண்டிய சிறந்த காரியம்: தவக்காலத்தில் ஏதாவது ஒன்றை நாம் கைவிடவேண்டும் என்று கடவுள் சொல்லவில்லை. எனினும், நாம் மகிழ்ந்து அனுபவிக்கும் ஒன்றை, தவக்காலத்தில் கைவிடுவது சிறந்தது. 'இயேசு எனக்காக எல்லாவற்றையும் விட்டுவிட்டார்' என்பதை விசுவாசிக்கும்போது, நாம் நேசிக்கும் ஒன்றை அவருக்காக விட்டுவிட முடியும். கைவிடுவது மாத்திரமே நமக்கு ஆசீர்வாதம் தரப்போவதில்லை. ஆனால், அந்த வெற்றிடத்தை கடவுளின் வார்த்தை மற்றும் ஜெபத்தால் நிரப்பும்போது, நம் பாவங்கள் யாவும் மன்னிக்கப்படும். பரலோகத்தில் பெரிய மகிழ்ச்சி உண்டாகும். உண்மையில் இதைவிட பெரிய ஆசீர்வாதம் எதுவும் இல்லை. எனவே, நமக்குப் பிடித்த ஒன்றை விட்டுவிட இன்று நாம் முடிவுசெய்வோம். குறிப்பிட்ட உணவை சாப்பிடுவது, ஷாப்பிங் செல்வது, டி.வி நிகழ்ச்சி பார்ப்பது போன்றவற்றில் இயேசுவுக்காக எதையாவது விட்டுக்கொடுக்க நாம் ஜெபத்தோடு முடிவு செய்வோம்.

பிரியமானவர்களே! தவக்காலம், நம்மை நாமே பரிசோதித்து அறிந்து, 'உள்ளம்' என்னும் நம் வீட்டை சுத்தம் செய்து, ஒழுங்கீனங்களை அகற்றும் காலம். கடவுள் தம் வீடாகிய நம்மைச் சீர்படுத்தி, பளபளக்கும் அழகான கட்டிடமாக நம்மை மாற்றியுள்ளார் என்ற விசுவாசத்தோடு கடவுளின் மாளிகையாய் நம்மைக் காத்துக்கொள்ள முயற்சி செய்வோம். வெளிப்புறமான அலங்காரத்தோடு திருப்தி அடையாமல், நமது ஆவி - ஆத்துமா - சரீரத்தை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து (ரோம-12:1), மனந்திரும்பி, பரிசுத்த அலங்காரத்துடன் கடவுளை ஆராதிக்க (சங்-29:2) நம்மை அர்ப்பணிப்போம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
அருட்திரு.எஸ்.ஜே.டி. தர்மராஜா

# BETHEL BIBLE COLLEGE

A Ministry of Gospel Mission of India (GMI)

(Affiliated to the Senate of Serampore College [University])

4th Lane, Seethamma Colony, Pattabhipuram Post, Guntur - 522006, Andhra Pradesh, India

Invites applications from committed and qualified men and women of any Christian denomination for the following degree courses in English under the Senate of Serampore College [University] system, commencing from June 2023

## 5 YEARS B.D.

Bachelor of Divinity

**Eligibility**

Intermediate pass

## 4 YEARS B.D.

Bachelor of Divinity

**Eligibility**

Graduation from any recognized University

D.C.S. (with Intermediate /+2 Pass) & 2 Qualifying papers pass

Mature Candidate with Mature Candidate Entrance Examination pass

## 2 YEARS B.D.

Bachelor of Divinity

**Eligibility**

B.Th. /B.Miss. / B.C.S. / Qualifying examination of the Senate of Serampore College [University]

Candidates willing to apply for any of the above BD degree courses can obtain application & prospectus from the Principal's office on payment of Rs 100/ (Rupees one hundred only) by MO/ DD/ Cheque. DD/ Cheque can be drawn in favor of "Bethel Bible College", payable at Guntur, Andhra Pradesh.

**The duly filled-in application form with required supportive documents should reach the Principal's office on/before 30, April, 2023**

Scan this QR code to download application

0863 226 2832 www.bethelbiblecollege.edu.in bbcguntur@yahoo.co.in https://www.facebook.com/bbcgunturap

வேத ஆராய்ச்சி - 68



# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Author: Rev. Dr. D. Suresh Rajan

சங்கீதம் – 69

Episode - 69

Rev. Dr. D. சுரேஷ் ராஜன்

**முன்னுரை:-**

இரட்சிப்பு வாசகர்களுக்கு இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். புதிய வருடத்தில் ஒரு மாதம் கடந்துவிட்டது. ஒவ்வொரு நாளும் புதுப்புது சவால்களை நாம் எதிர்கொண்டு வருகிறோம். கிறிஸ்தவர்களாக இந்தியாவில் வாழ்வது மிகவும் கடினமாக மாறிக்கொண்டிருக்கிறது. புதுப்புது சட்டங்கள், விதிகள். நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் என்று நம் உரிமைகள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நாட்களில் தாவீதின் சங்கீதங்கள் நமக்கு ஆறுதலாகவும் அரவணைப்பாகவும் உள்ளன. இந்த சங்கீதம் மேசியாவை குறித்த பல தீர்க்கத் தரிசனங்களை உள்ளடக்கியது எனவே இதை ‘Messianic Psalm’ என்று அழைக் கின்றனர். இந்த செய்தியில் பயனுள்ள சில குறிப்புகளை நமது ஆசீர்வாதத் திற்கென்று தியானிப்போம்.

**1. துன்பங்கள் நமது ஆத்துமத்தைப் பாதிக்கின்றன:-**

மனிதர்களாகிய நாம், ஆவி-ஆத்துமா-சரீரம் ஆகிய மூன்று கூறுகளை உள்ளடக்கி யவர்கள். மனுக்குலம் படைக்கப்பட்டபொழுது தேவன் தனது ஜீவ-சுவாசத்தை மனிதனின் நாசியில் ஊதினார், அவன் ஜீவ ஆத்துமாவானான் (ஆதி-2:7) என்று திருமறை நமக்கு கூறுகிறது. இந்த ‘ஆத்துமா’ அல்லது உள்மனம் என்பதை ‘உள்ளான மனிதன்’ என்று அழைக்கிறோம். நாம் மரித்ததும் நமது சரீரம் மண்ணுக்குச் செல்லும். ஆனால், நமது ஆத்துமமோ, தேவனிடத்திற்குத் திரும்பும். நமது ஆள்தத்துவம் அல்லது ‘personality’ என்பது நமது ஆவி-ஆத்துமா-சரீரம் ஆகிய மூவற்றினால் வரையறுக்கப்படுகிறது. நம் வாழ்வில் வேதனைகள் துன்பங்கள் வரும்பொழுது, அது நமது உள்ளான மனிதனையும் (ஆத்துமா) பாதித்து, இறுதியாக நமது ஆள்தத்துவத்தையே பாதிக்கிறது. இதைத்தான் தாவீது தனது அனுபவத்தின் மூலம் இங்க குறிப்பிடுகிறார். ‘‘தேவனே, என்னை இரட்சியும். வெள்ளங்கள் என் ஆத்துமா மட்டும் பெருகி வருகிறது’’ (வச-1). ‘‘என் ஆத்துமா வாடும்படி உபவாசித்து அழுதேன். அதுவும் எனக்கு நிந்தையாய் முடிந்தது’’ (வச-10), ‘‘நீர் என் ஆத்துமாவிடத்தில் வந்து அதை விடுதலைபண்ணும்’’ (வச-18) என்று தாவீது புலம்புவதை இங்கு காண்கிறோம். இந்த சங்கீதம் இயேசுவைக் குறித்த தீர்க்கத்தரிசனமாய் இருந்தாலும், மேற்கண்ட நம் வாழ்வின் உண்மைகளையும் நமக்குத் தெரிவிக்கின்றன. துன்பத்தினூடே செல்லும்பொழுது நாம் துவண்டுவிடுகிறோம், நமது மனம் பதைபதைக்கிறது. வாழ்வின் விளிம்பிற்கே வந்துவிட்டதாக நாம் நினைக்கிறோம். இதன் விளைவாக நமது சரீரத்திலும் சோர்வுகளும் பிரச்சனைகளும் ஏற்படு கின்றன. இப்படிப்பட்ட மன அழுத்தந்தான் பெரும்பாலான சரீர வியாதிகளுக்குக் காரணம் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். நமது ஆள்தத்துவம் பாதிக்கப் படுவதினால், சமுதாயத்தில் நம் நிலையும் பல நேரங்களில் கேள்விக்குறியாகிவிடுகிறது.

இதை வாசிக்கும் நீங்கள் இத்தகைய அனுபவங்களுக்குள்ளாக கடந்து செல்லுகிறவராக இருந்தால் உங்களக்கு ஓர் நற்செய்தி! தாவீதின் இறைவன் இன்றும் உங்களுக்கு உதவிசெய்ய வல்லவர்!

**2. துன்பங்கள் காரணமில்லாமல் வருகின்றன:-**

நமது கலாச்சாரத்தில், ஒருவருடைய வாழ்வில் துன்பங்கள்-வேதனைகள் பெருகும் போது, ‘இவன்/இவள் என்ன பாவம் செய்தானோ/செய்தாளோ என்று கூறுவதுண்டு. பாவங்கள் மற்றும் அக்கிரமச் செய்கைகள் மூலம் வியாகுலங்கள் வேதனைகள் வருவது உண்மைதான். எனினும், எல்லா நேரத்திலும் பாவத்தினால் மட்டுமே வேதனை வருகிறது என்பது சரியாக இருக்காது. ‘‘நிமித்தமில்லாமல் (காரண மின்றி) என்னைப் பகைக்கிறவர்கள் என் தலைமயிரிலும் அதிகமாய் இருக்கி றார்கள்.’’ வீணாக எனக்கு சத்துருக்களாகி என்னைப் பகைக்கவேண்டும் என்றி ருக்கிறவர்கள் பலத்திருக்கிறார்கள். நான் எடுத்துக்கொள்ளாததை கொடுக்க வேண்டியதாயிற்று.’’ (வச-4) என்று தாவீது தன் அனுபவத்தை விவரிக்கிறார். அருமையான தேவபிள்ளையே! நீயும் துவண்டுபோகாதே. தாவீதின் வாழ்விலும், இயேசுவின் வாழ்விலும், இயேசுவின் சீடர்களின் வாழ்விலும் இத்தகைய சூழ்நிலை கள் வந்ததை வேதத்தில் பல இடங்களில் நாம் காண்கிறோம். ஆகவே, உங்கள் வாழ்வில் வரும் காரணமில்லாத பிரச்சனைகளை எண்ணி துவண்டு விடாதீர்கள். பிசாசானவனும் அவனது மக்களும் நம்மை விழுங்கும்படிக்கு பல உபாய தந்திரங்களைச் செய்யலாம். ஆனாலும், தாவீதின் இறைவன், காரணமில்லாமல் வந்த நிந்தைகளிலிருந்து வெளிவர உங்களுக்கு உதவிசெய்வார் என்பதில் ஐயமில்லை.

**3. துன்பங்களை இறைவனிடம் தெரியப்படுத்தவேண்டும்:-**

வாழ்வில் துன்பங்களும் துயரங்களும் சூழ்ந்துகொள்கையில், மனிதரை நாடிப் போகாதிருங்கள். பெரும்பாலான நேரங்களில், ‘யாராவது ஒருவர் உதவிசெய்வார்’ என்று எண்ணி நாம் குறிப்பிட்ட ஒரு நபரைச் சார்ந்துகொள்கிறோம். பல நேரங்களில் நாம் நம்பினவர்கள் நம்மைக் கைவிடுவது மட்டுமன்றி, நமக்குச் சத்துருக்களாகவே மாறிவிடுவதுண்டு. ஆகவே, நாம் எக்காலத்திலும் இறை வனையே சார்ந்துகொள்ள வேண்டும். ‘‘கர்த்தாவே, அனுக்கிரக காலத்திலே உம்மை நோக்கி விண்ணப்பம் செய்கிறேன். தேவனே, உமத மிகுந்த கிருபையினாலும் இரட்சிப்பின் சத்தியத்தினாலும் எனக்குச் செவிகொடுத்தருளும்.’’ (வச-13) என்று தாவீது மன்றாடுவதை நாம் இங்கு காண்கிறோம். இச்சங்கீதம் முழுவதிலுமாக இப்படிப்பட்ட மன்றாட்டின் எதிரோலிப்பை நாம் காணமுடியும். ‘‘கர்த்தர் எளியவர்களின் விண்ணப்பத்தைக் கேட்கிறார். கட்டுண்ட தம்முடையவர்களை அவர் புறக்கணியார்.’’ (வச-33) என தாவீது மிகத் தெளிவாக இங்கு கூறுவது நமக்கு ஆறுதலையும் தைரியத்தையம் அளிப்பதாக உள்ளது.

அன்பர்களே! நம்முடைய பிரச்சனை எதுவாக இருந்தாலும், அதை தேவனிடத்தில் தெரியப்படுத் துவோம். கர்த்தர் மாத்திரமே நமக்கு விடுதலையை அருளக்கூடும்.

**முடிவுரை:-**

பிரச்சனைகள் நமது தலைக்குமேல் புரளும்பொழுது, நமது எல்லா பாடுகளையும் ஏற்றுக்கொண்ட நமக்கு முன்சென்ற நமது உத்தம பிரதான ஆசாரியசாகிய இயேசு கிறிஸ்துவை நாம் நோக்கிப பார்த்து, அவரிடமிருந்து ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக்கொண்டு, இம்மையிலும் மறுமையிலும் பேரின்ப வாழ்வு வாழ ஆண்டவர்தாமே நமக்கு அருள் புரிவாராக. ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்...

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CO-FOUNDER, BIBLE TRANSLATION INITIATIVES, COIMBATORE, SOUTH INDIA
ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன்,
இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

# வேதாகம போட்டி-147 சரியான பதில் அளித்தோர்

1) அமலியா லோகநாதன் TVM
2) அமிர்தகனி CHE
3) ஏஞ்சல் சி. TIN
4) ஏஞ்சல் ஜெனிஃபா ஜெயந்த் CHE
5) ஏஞ்சல் ராஜதுரை CHE
6) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
9) அனி பாய் ஜாண் TIN
10) அனிதா ஜாண் CBE
11) அனிதா மோகன்ராஜ் ERO
12) அரோமா சாத்ராக் TIN
13) ஆர்தர் மாசில்லாமணி CHE
14) அருள்செல்வி VIR
15) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
16) பெல்சி தங்கராஜ் CHE
17) பெனிட்டா பிராங்க்ளின் CHE
18) பியூலா அலெக்ஸ் CHE
19) பியூலா ஜேசுராஜன் PON
20) செலினா பென்சி வில்சன் DR, KUW
21) செலினா வின்செண்ட் TIN
22) சந்திராபாய் மாசிலாமணி AVD
23) சந்திரலேகா KAL-AP
24) சந்திரா சாமுவேல் TIN
25) சார்லஸ் ஃபின்னி DR. CHE
26) சார்லட் டேவிட் CHE
27) செல்லம் சங்கீதா நோவா TIN
28) சிட்டி TR. TVL
29) சித்ரா பெஞ்சமின் TVL
30) கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
31) கிறிஸ்துதாஸ் GOP
32) கிறிஸ்டி ஞானராஜ் CHE
33) கிறிஸ்டி ஜேம்ஸ் SIR
34) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
35) டெய்ஸி சாம் TUT
36) டேனியல் தாமஸ் TIN
37) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
38) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
39) தெபோராள் ஆனந்தமணி CNG
40) டெல்பி பாத்திமா CHE
41) தேவமணி ஆபிரகாம் TUT
42) தேவநேசம் ராஜாசிங் CHE
43) டோராபாய் CHE
44) எலிசபெத் செல்லத்துரை CHE
45) எமிமாள் JOL
46) எவாஞ்சலின் கிப்ஸன் MSK
47) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
48) குளோரா BBC BD TEN
49) ஞானம் ஜெபராஜ் TIN
50) ஞானம் பிலிப் CHE
51) ஞானராணி PAN TVL
52) ஞானரதி PAN TVL
53) ஞானசெல்வி மோசஸ் CHE
54) கோல்டா ஜேசுபாதம் MUM
55) கிரேஸ் டேனி TEN
56) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
57) கிரேஸ்லின் சாந்தி TIN
58) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
59) கிரேஸியா ஜெயபால் CHE
60) கிரிசெல்டா செய்லர் CHE
61) குணவதி ஜெபமணி CHE
62) ஹெலன் ஜான்சிராணி TIN
63) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
64) ஹெலன் திலக் TUT
65) ஹேமா அஜீத் CHE
66) ஹேமா கேப்ரியேல் BAN
67) ஹெப்சிபா மங்களராஜ் TIN
68) ஹிம்லா ராஜகுமாரி CHE
69) இளவரசி ஜோபிதா CBE
70) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
71) இந்திரா கெத்ஸி டேவிட் TIN
72) ஜமீலா செல்வராஜ் CHE
73) ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI
74) ஜேன் தர்மராஜ் TIN
75) ஜான்ஸி சந்தியா MAR
76) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
77) ஜெயக்குமாரி CBE
78) ஜெபா ஜெயராஜ் AVD
79) ஜெபக்குட்டி மோசஸ் TIN
80) ஜெபரத்தினம் மெர்லின் TUT
81) ஜெபசீலி கிளின்டன் CHE
82) ஜெபா சீனி MKM
83) ஜெமி ஜாய் பிளஸ்ஸி TIN
84) ஜெமீலா நிக்ஸன் CHE
85) ஜெனித்தா செல்வின் TIN
86) ஜெனிட்டா ஹெலன் CBE
87) ஜெனிட்டா ஷெருபா ஞானவேல் DAR
88) ஜென்சி ஞானேஷ் MUM
89) ஜெரின் ஸ்டீபன் CHE
90) ஜெஸி செல்லதுரை CBE
91) ஜெஸி ஜெயக்குமார் TIN
92) ஜெயா ஆல்பர்ட் KUM
93) ஜோனா ஸ்டீபன் AVD
94) ஜோஸ்பின் ஜெஸி CHE
95) ஜாய்ஸ் பாண்டியன் CHE
96) ஜூலியட் CHE
97) ஜூலியட் ஜெயக்குமார் TIN
98) கலா கிருபாகரன் TIN

வேதாகம போட்டி-147 சரியான பதில் அளித்தோர் பட்டியலின் தொடர்ச்சி

99) கலையரசி செல்வராஜ் CHE
100) கஸ்தூரி எலியாஸ் TIN
101) கிங்ஸ்லி ரவிக்குமார் CHE
102) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
103) லதா மைக்கேல்ராஜ் CHE
104) லீலா டேவிட் CHE
105) லீலா ஜோஸப் CBE
106) லில்லி ஜாண்ஸன் CHE
107) லிஸி டென்சிங் TIN
108) மல்லிகா V. CHE
109) மல்லிகா ஜாய்ஸ் TCY
110) மணிமேகலை ஜெயக்குமார் TIN
111) மனோகரம் தனராஜ் NAZ
112) மரிய பாப்பா CHE
113) மரியாள் JS TUT
114) மெஜிலா ஜோஷ்வா TUT
115) மெர்சிபா CBE
116) மெர்சி தனராஜ் CBE
117) மெர்சி ∴புளோரா பாஸ்கர் VEL
118) மெரிட்டா ஜெயபாலன் TCY
119) மியூரியல் புஷ்பராஜ் CHE
120) நிக்ஸன் எவர்பிரைட் TIN
121) ஆலிவ் ஜெயபாலன் CBE
122) பாக்யபாய் ஆரோன் TIN
123) பமீலா எட்வின் KAN
124) பால் தங்கம் CHE
125) பெர்சி பால் பொன்சிங் SAW
126) பிங்க்லின் தேவமலர் CHE
127) பிரேமா பூபாலன் AVD
128) பிரேமா ஜானி PCM
129) பிரேமா ஸ்டாலின் CHE
130) பிரின்ஸ் தயாநிதி CHE
131) பிரிஸ்கில்லாள் சசி CBE
132) பிரிசில்லா தாஸ் CHE
133) பிரியா ராஜ்குமார் CHE
134) ரேச்சல் ஈஸ்டர் VEL
135) ரேச்சல் கனகராஜ் CBE
136) ராஜபிரமிளா TPT
137) ராஜ்மேரி சார்லஸ் KER
138) ரமோலா அதிசயராஜ் TIN
139) ராணி பிரபாகரன் TIN
140) ராணி சாமுவேல்ராஜ் CHE
141) ரத்னா டென்னிஸன் CBE
142) ரத்னாவதி பாண்டியன் CHE
143) ரெஜினா விக்டர் TIN
144) ரோஸ்லின் மார்கிரெட் CHE
145) ரோஸி ஸ்டீபன் CHE
146) ரூபவதி நோபிள் TIN
147) ரூபி ஜாண் MUM
148) ரூபி ஜாண்ஸன் TIN
149) ரூத் ஜாண்ஸன் TIN
150) சலோமி மனோகர் DR. CHE
151) சாமுவேல் டேவிட் TPT
152) சாரா பாலசிங் MDU
153) சரோஜினி எலிசபெத் CHE
154) செல்வ அமுதா ஜார்ஜ் CHE
155) செல்வ பென்ஸி ஆபேல் KOT-AP
156) செல்வம் TIN
157) செல்வராணி ஆல்பர்ட் CHE
158) செல்வராணி ஆல்பர்ட் CHE
159) செல்வராணி G CHE
160) செல்வி அமிர்தராஜ் TVR
161) ஷாலி எடிசன் CHE
162) சாந்தி ஆஷெர் TIN
163) சாந்தி ஆல்பர்ட் PCT
164) சாந்தி ஜெபக்கனி KAL-AP
165) சாந்தி ஜெயசீலன் CHE
166) சாந்தி ரோஸ் CBE
167) ஷர்மிளா செல்வராஜ்.DR. CUD
168) ஷீபா சாம்ஸன் CHE
169) ஷீபா சாமுவேல் CUD
170) ஷெரீன் ஜெபராஜ் PAN
171) சவுந்தரம் சாலமோன் CHE
172) சவுந்தரி POD-TVL
173) ஸ்ரீஜா பிராங்க்ளின் AKA-CHE
174) ஸ்டெல்லா டேவிட் TUT
175) ஸ்டெல்லா கனகராஜ் CHE
176) ஸ்டெல்லா தூசையய்யா TUT
177) சுகிர்தா ஆல்வின் CHE
178) சுகிர்தா சின்னதுரை TIN
179) சுஜாதா சாமுவேல் CHE
180) சுமித்ரா B. CHE
181) சுசீலா தியோடர் TCY
182) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
183) தாரா மாணிக்கம் CHE
184) தெல்மா ஸ்டேன்லி MDU
185) உமா குளோரி CHE
186) வனஜா ஹெர்பர்ட் TIN
187) வசந்தா அன்பன் TIN
188) வசந்தா சந்திரசேகர் CBE
189) வசந்தி கருணாகரன் CHE
190) வசந்தி வாசன் CHE
191) விஜயராணி A. CHE
192) விஜி டேனியல் CHE
193) விமலா ஜெயக்குமார் TUT
194) விண்ணரசி ரோஸ் CHE
195) வினோலியா வில்சன் VAN
196) வைலட் கிறிஸ்டோபர் TIN
197) வைலட் சைரஸ் CHE
198) வெஸ்லி சாமுவேல் TUT

PRAYER-WINDOW



PRAYER-WINDOW

ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

## ஜெப–ஜன்னல் ஜெப நேரங்கள் பிப்ரவரி – 2023

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 10–02–2023 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5முதல் 6மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 17–02–2023 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1முதல் 2மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 24–02–2023 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8முதல் 10மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப–ஜன்னல் ஜெப–நேரங்களில் தானி–6:10 வசனத்தின்படி **"தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க"** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப–ஜன்னல் ஜெப–வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் உங்களை வேண்டிக்கொள்கிறோம்.

# சாம்பல் புதன் – ASH WEDNESDAY-2023

## Wednesday, the 22nd February 2023 – பிப்ரவரி, 22 2023 புதன்

சாம்பல் புதன் என்பது கிறித்தவர்கள் கடைபிடிக்கும் 40-நாள் தவக்காலத்தின் (நோன்பு காலத்தின்) தொடக்க நாள் ஆகும். சாம்பல் புதனிலிருந்து 46-ம் நாளில் கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாள் பண்டிகை கொண்டாடப்படும். தவக்காலத்தின் இடையே வருகின்ற ஞாயிற்றுக்கிழமைகளில் உபவாசம் (நோன்பு) கடைப்பிடிப்பது வழக்கமல்ல, ஏனென்றால் ஞாயிற்றுக்கிழமை இயேசு உயிர்த்தெழுந்த மகிழ்ச்சி நாள்; எனவே, ஞாயிறு என்பது நோன்பு நாளல்ல என்பது கிறித்தவர்களின் கருத்து.

சாம்பல் புதனைக் கத்தோலிக்க, லூத்தரன், ஆங்கிலிக்கன், மெதடிஸ்டு போன்ற மைய நீரோட்ட சபையினர் (mainline churches) அனைவரும் கடைப்பிடிக்கின்றனர். பொதுவான கிரகோரியன் கிறித்தவ நாட்காட்டிப்படி, இயேசுவின் உயிர்த்தெழுதல் பண்டிகையானது மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் வருகின்ற 'முழுநிலா' நாளையொட்டி வருகின்ற ஞாயிறு அன்று கொண்டாடப்படும். இது பண்டைய யூத மரபுப்படி அமைந்த பாஸ்கா பண்டிகைக் கணிப்பை அடிப்படையாகக் கொண்டது. எனவே, சாம்பல் புதன் என்பது பிப்ரவரி 4-மற்றும் மார்ச்-10 ஆகிய தேதிகளுக்கு இடையிலுள்ள ஏதாவது ஒரு புதனன்று வரலாம். இந்த ஆண்டு (2023) சாம்பல் புதன் பிப்ரவரி 22-ம் நாள் கடைபிடிக்கப்படுகிறது.

பரிசுத்த வேதாகமத்திலுள்ள புதிய-ஏற்பாட்டில் இயேசு இரவும் பகலும் 40-நாள் வனாந்திரத்தில் உபவாசம் இருந்தார் (மத்-4, மாற்-1, லூக்-4) என்ற செய்தி உள்ளது. இயேசுவைப் பின்பற்றி, கிறித்தவர்களும் 40-நாட்கள் உபவாசத்திலும் ஜெபத்திலும் ஈடுபட தொடக்கமாக அமைகிறது இந்த சாம்பல் புதன். ஷாலோம்.

# வேதாகம போட்டி-148

வேதபகுதி ஏசாயா முழுவதும்

ஓரிரு வார்த்தைகளில் பதிலளிக்கவேண்டும்

பதில்களுடன் வேதவசன இருப்பிடம் எழுதவேண்டும்

பதிலளிக்க கடைசி நாள் பிப்ரவரி-25

1. ஒருவருக்காக ஒருவர் அலறுவார்கள். எல்லாரும் ஏகமாய் அலறுவார்கள் - யார்?
2. வெள்ளம்போல் சத்துரு வரும்போது அவனுக்கு விரோதமாய் கொடியேற்றுவது யார்?
3. சமாதானத்துக்குள் பிரவேசித்து தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறவர்கள் யார்?
4. கர்த்தருடைய தூதன் அசீரியரின் பாளயத்தில் எத்தனைபேரை சங்கரித்தான்?
5. பறந்து காக்கிற பட்சிகளைப்போல கர்த்தர் எதன் மேல் ஆதரவாய் இருப்பார்?
6. வாந்தியினாலும் அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கிறது எது (எவை)?
7. எத்தனை வருஷங்களின் முடிவிலே கர்த்தர் வந்து தீருவைச் சந்திப்பார்?
8. இரவிலே பாழாக்கப்பட்டு சங்காரமான மோவாபிலுள்ள இரண்டு பட்டணங்கள் எவை?
9. உன் வெள்ளி களிம்பாயிற்று உன் திராட்சரசம் கெட்டுப்போயிற்று - சரியா தவறா?
10. நீதிமானுக்கு சமாதானம் இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார் - சரியா தவறா?
11. சேனைகளின் கர்த்தருடைய திராட்சத்தோட்டம் இஸ்ரவேலின் வம்சமே - சரியா தவறா?
12. சின்னவன் ஆயிரமும் பெரியவன் பலத்த ஜாதியுமாவான் - சரியா தவறா?
13. உங்கள் வெட்கத்துக்குப்பதிலாக இரண்டத்தனையாய் 'இது' வரும்:
அ) மகிழ்ச்சி ஆ) வியாதி இ) தீமை ஈ) பலன்
14. நீ 'இவைகளை' கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை:
அ) ஏரிகளை ஆ) அலைகளை இ) ஆறுகளை ஈ) வெள்ளங்களை
15. 'இதின்' தண்ணீர்கள் இரத்தத்தால் நிறைந்திருக்கும்:
அ) மோவாபின் ஆ) ஏலீமின் இ) தீமோனின் ஈ) யோர்தானின்
16. ஏசாயா, 'இந்த' ராஜாவின் நாட்களில் தீர்க்கத்தரிசனம் உரைக்கவில்லை:
அ) தாவீது ஆ) உசியா இ) ஆகாஸ் ஈ) எசேக்கியா
17. கேட்டுக்கொள் இதை, கேட்டுக்கொள் இதை, என்றார் கர்த்தர்!
கேட்கமாட்டேன் இதை, கேட்கமாட்டேன் இதை, என்றான் மன்னன்!
கர்த்தர் தருவார் இதை, கர்த்தர் தருவார் இதை, என்றார் தீர்க்கர்! இது என்ன?
18. கடவுளுக்கு மேலே நிற்போர்! கால்-முகம் மூடி நிற்போர்!
காற்றின் மீது பறந்து நிற்போர்! கர்த்தர் துதி சொல்லி நிற்போர்! யார் இவர்கள்?
19. காலம் காட்டும் கருவி நான்! நேரம் காட்டும் நிழலி நான்!
கதிரவனால் முன்-நகர்ந்தேன்! கர்த்தருக்காய் பின்-நகர்ந்தேன்! என் பெயர் என்ன?
20. அறியாதிருந்த இவருக்கு பெயரிட்டு, அறியாதிருந்த இவருக்கு இடைகட்டி, பேர் சொல்லி அழைத்து! வலது-கை பிடித்து! அபிஷேகம் இவருக்குத் கர்த்தர் தந்தார்! யார் இவர்?

## வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

**ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST**

Mrs. Jeyaseeli Dharmaraja, Flat: F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93.
E-mail: ratchippu@hotmail.com/siddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463



சகோ. C. ஏஞ்சல்

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

SWORD OF EXCELLENCY KHEREV GAAVAH TEKHA

## மகிமை பொருந்திய பட்டயம்

EPISODE - 45 கெரேவ் கா-ஹாடேகா பாகம் - 45

தேவன் பூமியனைத்திற்கும் ராஜா; கருத்துடனே அவரைப் போற்றிப் பாடுங்கள். சங்–47:7

For God is the King of all the earth: sing ye praises with understanding. Psalm-47:7

பதினாயிரங்களான பரிசுத்தவான்களோடே இந்தியாவில் பிரசன்னமாகுகிற கர்த்தரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு மகிமையான பிப்ரவரி மாத நல்வாழ்த்துக்கள்.

**யாத்-15:1பி** கர்த்தரைப் பாடுவேன் அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார். குதிரையையும் குதிரை வீரனையும் கடலிலே தள்ளினார். அல்லேலூயா!

**யாத்-33:22** என் மகிமை கடந்துபோகும்போது நான் உன்னை அந்தக் கன்மலை யின் வெடிப்பிலே வைத்து, நான் கடந்துபோகுமட்டும் என் கரத்தினால் உன்னை மூடுவேன். 2023ம் வருடம் இந்திய திருச்சபையை தமது பரலோக மகிமையால் மூடுவார். இதுவரை தொடருவேன், பிடிப்பேன், கொள்ளையாடிப் பங்கிடுவேன், என் பட்டயத்தை உருவுவேன், என் கை அவர்களைச் சங்கரிக்கும் என்று சொன்ன பகைஞரை கர்த்தரின் வலதுகரம் நொறுக்கிப்போட்டது, ஆழி அவர்களை மூடிப்போட்டது என்ற வேதவசனத்தின்படி (யாத் அதி-15) கர்த்தரின் வலதுகரம் தமது பிள்ளைகளைப் பாதுகாக்கும்.

**உபா-32:42** என் பட்டயம் தலைவர் முதற்கொண்டு சகல சத்துருக்களின் மாம்சத்தையும் பட்சிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

**எண்-14:10** கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக் கூடாரத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லாருக்கும் முன்பாகக் காணப்பட்டது. இன்றும் நம் திருச்சபையில் கர்த்தர் மகிமையாய் இறங்கிவருவார்.

**ஜெபம்:** எங்கள் பலத்தின் மகிமையாய் இருக்கிறவரே, உம்மைத் துதிக்கிறோம் (சங்-89:17, 72:19). இந்தியா முழுதும் உமது மகிமையால் நிறைந்திருக்கிற வருடமாக இவ்வருடத்தைத் தந்தவரே, உம்மை ஸ்தோத்தரிக்கிறோம். பலவான்களின் வில்லை முறித்து, ஈட்டியை ஒடித்து, போரடிக்கிறதற்கு புதிதும் கூர்மையுமான பற்களுள்ள எந்திரமாக்கி, மதில்களை மிதித்து நொறுக்கி, குன்றுகளை பதருக்கு ஒப்பாக்குகிற உமது அபிஷேகத்தால் நிரப்புகிறவரே, உமது கரத்தில் எங்களை அர்ப்பணிக்கிறோம். எங்களைச் சுற்றி அக்கினி மதிலாயிருந்து எங்கள் நடுவில் மகிமை பொருந்திய பட்டயமாய் இருக்கிற உமக்கு நன்றி. இயேசுவின் நாமத்தில் ஆமென் பிதாவே.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
**C. Angel**

தேன்துளி வேதவசனக் கதை–141*. . .

# இயேசுவண்டை நெருங்கி ஜீவிப்பதற்கு பாடுகள் அவசியம்

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A. M.Ed.



சகோ. அசரியா

ஜஸ்டின் என்ற 10-ம் வகுப்பு மாணவன், ஒரு பட்டுப்பூச்சிப் பண்ணைக்குச் சென்றான். அங்கு பட்டுப்பூச்சிகளைக் கண்டு பரவசமடைந்தான். பட்டுப்பூச்சிகள் கூட்டிலிருந்து வெளிவரும்போது உடலை நெளித்தும், வளைத்தும், அசைத்துக் கொண்டும் கூட்டிலிருந்து வெளிவந்தன. இத்தனை பாடுகளுக்குப் பின் கூட்டிலிருந்து வெளிவந்த அந்தப் பட்டுப்பூச்சிகள் மகிழ்ச்சியாக வானில் பறக்க ஆரம்பித்தன. இதைக்கண்ட ஜஸ்டின் மிக்க மகிழ்ச்சியடைந்தான். ஆனால், ஒரு பட்டுப்பூச்சி மட்டும் கூட்டிலிருந்து வெளிவர முடியாமல் செயலற்று இருந்தது. இதைக் கண்ட ஜஸ்டின் மிகவும் கவலை கொண்டான். அதைக்குறித்து மிக வேதனை அடைந்தான். ஜஸ்டினின் உணர்வுகளை அறிந்த அந்த பண்ணையின் பணியாளர் அந்த கூட்டை மெது வாகப் பிரித்து தன் கைகளால் அந்த பட்டுப்பூச்சியை வெளியே எடுத்தார். ஆனால் அந்தப் பட்டுப்பூச்சியானது, தங்கள் சரீரத்தை நெளித்து, வளைத்து கூட்டிலிருந்து வெளிவந்து வானில் பறந்து சென்ற மற்றப் பூச்சிகளைப் போல் அல்லாமல், அசைவற்றுக் கிடந்தது. வானில் பறக்க முடியாத அந்தப் பட்டுப்பூச்சியினிமித்தம் ஜஸ்டின் மிக மிக வேதனை அடைந்தான். அந்தப் பட்டுப்பூச்சி கூட்டிலிருந்து தானாக வெளிவராததால் அதன் சிறகுகளில் வலிமை இல்லை வானிலும் பறக்க முடியவில்லை. ஆனால், கூட்டிலிருந்து பாடுகள் பட்டு வெளிவந்த பட்டுப்பூச்சிகளின் இறகுகள் வலிமை பெற்றிருந்ததால் அவை எளிதாக வானில் பறந்து சென்றன என்பதை அந்தப் பணியாளர் அவனுக்கு விளக்கினார்.

நாமும் கூட பாடுகள் இல்லாமல் வாழும் போது வாழ்க்கையில் முன்னேற்றம் இராது. கடவுளின் அன்பையும், இயேசுவின் பாடுகள் மற்றும் தியாகத்தை உணர முடியாது. ஆனால், பாடுகள் பட்டு கூட்டிலிருந்து தானாக வெளிவரும் பட்டுப் பூச்சிகளின் இறக்கைகள் வலிமை பெற்று பறப்பதற்கு பெலன் கிடைப்பது போல, நம்முடைய வாழ்க்கையில் பாடுகள், துன்பங்கள், துயரங்களோடு, இயேசு இரட்சகரிடம் வரும் போது அவர் நமக்கு வேண்டிய பெலன் தந்து, நம்மை ஆற்றித் தேற்றி அற்புதமாக வழிநடத்தி, எண்ணி முடியாத ஆசீர்வாதங்களைத் தருகிறார். நாம் எவ்விதத்திலும் கலங்கி சோர்ந்து போக வேண்டிய அவசியமில்லை. ஆகவே, இவ்வுலகின் பாடுகளை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு இயேசுவை உறுதியாய்ப் பற்றிக் கொண்டு மேலான ஆசீர்வாதங்களைப் பெற உங்களை வாழ்த்துகிறேன்.

தேவன் தாமே, கொஞ்ச காலம் பாடநுபவிக்கிற உங்களை சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலைநிறுத்துவாராக. 1பேதுரு 5:10

கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி, உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார். 1பேதுரு2:21

EPISODE 7

# இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

## இரண்டாயிரம் ஆண்டு வரலாறு..
## இரண்டாம் வருகைக்கு தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்



**இந்திய திருச்சபை சரிதை:
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)
தொகுதி-2 பகுதி-2**

### 2. இந்திய இடைக்காலத்தில் கிறிஸ்தவர்கள்

### 2. ஒரு இந்திய ஆவணம்

இடைக்காலத்தில் இந்திய பூர்வீக கிறிஸ்தவர்களுடன்

ஆங்கிலோ-இந்தியர்கள், லூசோ-இந்தியர்கள், ஆர்மேனிய இந்தியர்கள் போன்ற சிறிய யூரேசிய கிறிஸ்தவ சமூகங்களும் இந்திய துணைக்கண்டத்தில் இருந்தன. செயிண்ட் தாமஸ் கிறிஸ்தவர்கள் பல்வேறு உரிமைகள் மற்றும் சலுகைகள் மற்றும் செப்புத் தகடுகளில் பதிவு செய்யப்படதக்க உயர் அந்தஸ்தை அனுபவித் ததாகத் தெரிகிறது, அவை செப்பேடுகள் (செப்பேட்ஸ்), ராயல் கிராண்ட்ஸ், சாசனம் என்றும் அழைக்கப்படுகின்றன. இதுபோன்ற பல ஆவணங்கள் தாழேகாட் சாசனம், குயிலான் தகடுகள் (அல்லது தரிசப்பள்ளி செப்பேடுகள்), மாம்பள்ளி சாசனம் மற்றும் இரவிகொர்த்தன் செப்பேடு போன்றவை கேரளாவின் சிரிய தேவாலயங்கள் வசம் உள்ளன. இவற்றில் சில முக்கிய ஆவணங்கள் (தகடுகள்) கி.பி-774ம் ஆண்டைச் சேர்ந்தவை.

அறிஞர்கள் கல்வெட்டுகளை ஆய்வு செய்து பல்வேறு மொழிபெயர்ப்புகளை உருவாக்கியுள்ளனர். வட்டெழுத்து மொழியில் பழைய மலையாளம் பயன்படுத்தப் படுகிறது. சில எழுத்து வடிவங்கள் கிரந்தா, பஹ்லவி, கு.்.பிக் மற்றும் எபிரேய (ஹீப்ரு) எழுத்துகளுடன் கலந்து காணப்படுகிறது. வேணாட்டின் திருவாங்கூர் ஆட்சியாளர் செயிண்ட் தாமஸ் கிறிஸ்தவர்களுக்கு எழுபத்திரண்டு உரிமைகள் மற்றும் சலுகைகளை வழங்கினார். அவை பொதுவாக உயர் அதிகாரிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டன. இந்த உரிமைகளில் இறக்குமதி வரிகள், விற்பனை வரி மற்றும் அடிமை வரி ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. கிபி 1225 தேதியிட்ட ஒரு செப்பு தகட்டிலுள்ள தகவல் மானியம் நஸ்ராணிகளின் உரிமைகள் மற்றும் சலுகைகளை மேலும் மேம்படுத்தப்பட்டதை குறிக்கிறது.

இந்திய ஆவணம் ஒன்று இப்போது கேரள சிரிய-கிறிஸ்தவர்கள் வசம் உள்ளது. அது ஒரு செப்புத் தகடு. அதில் கிறிஸ்தவர்கள் பற்றிய குறிப்பு இருப்பதாகக் கருதப்படுகிறது. வீரராகவா சக்கரவர்த்தி என்று அழைக்கப்படும் ஒரு மன்னர் செரமண் என்று அழைக்கப்படும் இரவி-கோர்த்தனுக்கு (உலகின் பெரும் வணிகர்), மாணிக்கிராம் என்று பட்டப்பெயர் இட்டு, அவருக்கு எண்ணெய் இடைத்தரகு செய்யும் உரிமையைத் தந்து, விற்பனையாளர்கள் மற்றும் ஐந்து வகை கைவினைஞர்களையும் தந்துள்ளார். சில வணிகப் பொருட்களுக்கான மானியம் மற்றும் தரகுகள் உள்ளிட்ட சலுகைகளையும் கிராங்கனூர் பகுதி தீர்வையையும் அவருக்கு வழங்கியுள்ளார்.

கிறிஸ்டியன் மெனெஸஸின் காலத்திலிருந்தே (16ஆம் நூற்றாண்டு) இந்த மானியங்கள் இருந்தன. இவை சிரிய குடியேற்றவாசிகளுக்கு வழங்கப்பட்டதாகவும் கருதப்படுகிறது. மணிகிராம் என்ற பட்டப்பெயரும் இந்த மானியங்கள் காரணமாகவே ஆகியுள்ளது. கேரளாவைச் சேர்ந்த கிறிஸ்தவர்களில் ‘ரவி-கொற்றன்’ என்பவர் பாரம்பரியமாக கிறிஸ்துவர் அவரது பெயருக்கு ‘இந்திய தோற்றம்’ கொண்ட ‘இரவி’ என்ற சரியான எழுத்து வடிவத்தைக் கொடுக்க முற்பட்டுள்ளதும் புலப்படுகிறது.

கிடைக்கப்பெற்ற மொழிபெயர்ப்புகளில் சரியான பொருள் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் வலுக்கிறது. முதல் சந்தேகம், கல்வெட்டு தேதி தொடர்பானது. மற்ற அனைத்தும் நிச்சயமற்றவை. முந்தைய மொழிபெயர்ப் பாளர்கள் அதை கி.பி-230 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கினர். இந்த செப்புத் தகடுகளை புகழ்பெற்ற இந்திய வானியலாளர், கே.என். டேனியல், பல ஆண்டுகளாக தீவிர ஆய்வுக்கு அர்ப்பணித்துள்ளார். இவர் கல்வெட்டை நன்கு புரிந்துகொள்ளக் கூடியவர். கல்வெட்டில் உள்ள தகவல்கள் அவருக்கு கி.பி-774 மட்டுமே சாத்தியமான தேதி என்று தெரிவித்தன. இவர் கூற்றுப்படி கி.பி 1300-1312க்கு முந்தைய வேறு தேதியிட முடியாது என்று கருதப்படுகிறது.

மிக சமீபத்திய பதிப்பாசிரியர் திரு ஏ.வெங்கையா இந்த கல்வெட்டை சாத்திய மான தேதிகளுடன் இணைக்கும் முயற்சியில் பிற செப்புத்தகடுகள், அன்றய பழங்கால அடிப் படைகள், கல்வெட்டுகள் மற்றும் மலையாள கல்வெட்டு-மொழி வடிவங்களின் சான்றுகள் முதலியவற்றால் முற்றிலும் சாத்தியமே என்ற முடிவுக்கு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலான அறிஞர்கள் திரு ஏ. வெங்கையாவின் தீர்ப்பை ஏற்றுக்கொள்வார்கள்:

ரவி-கொற்றன் மதத்தின் அடிப்படையில் ஒரு கிறிஸ்தவராக இருக்கலாம். ஆனால் அவரது பெயர் மற்றும் தலைப்பு இந்த திசையில் எந்த துப்பும் கொடுக்கவில்லை. மேலும், ஆவணத்தை அதன் தற்போதைய கிறிஸ்தவ உரிமையாளர்கள் வைத்திருப்பதைத் தவிர இந்தியாவில் உள்ள கிறிஸ்தவம் மற்றும் கிறிஸ்தவர்களின் நிலை குறித்து எந்த ஆதாரமும் அதில் இல்லை. உண்மையில் இடைக்காலத்தின் முந்தைய அல்லது பிந்தைய நாட்கள் குறித்த எந்த துப்பும் இதில் இல்லை என்பது தெரிகிறது.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd.,
(Pope’s College Sawerpuram), Thiruvanmiyur, Chennai. South India

# ஜெப-ஜன்னல் நன்றி-பலிகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடி ஜெபிப்போம் - Come! Let us intercede to God**

1) அகில உலக மக்களின் சுக வாழ்வுக்காக... உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளின் பொருளாதாரம் மேம்பட... பெருந்தொற்று, புயல்-மழை, பூமி-அதிர்ச்சி, எரிமலை, காட்டுத்-தீ போன்ற பேரிடர்களிலிருந்தும், பிரிவினைவாதம் - தீவிரவாதங்களிலிருந்தும் மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்திய பொருளாதாரம் சீரடைய... இந்தியாவில் மதவாதம், வன்முறைவாதம், பிரிவினைவாதம் வேரறுக்கப்பட... ஒன்றிய அரசு எல்லா மாநிலங்களையும் சமமாய் பாவித்து, மாநிலங்களுக்கு சேரவேண்டிய நிலுவைத் தொகையை பாரபட்சமின்றி வழங்க... விலைவாசிகள் குறைய... நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க... மேகாலயா, நாகாலாந்து, திரிபுரா ஆகிய 3-மாநில பொதுத்-தேர்தல்கள் மற்றும் மக்களவை-சட்டசபை இடைத்தேர்தல்கள் நேர்மையாக அமைதியாக நடைபெற...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள் இன -மத - மொழி வேறுபாடின்றி வாழ... தமிழ்நாட்டில் விவசாயம் மற்றும் தொழில்கள், வியாபாரம் சிறக்க... தமிழ்நாட்டில் மத-பிரிவினைவாதங்கள், வன்முறைவாதங்கள் கட்டுப்படுத்தப்பட... புயல் - மழை -வெள்ளம் - கொரோனா பாதிப்புகள் நீங்க... தமிழ்நாட்டில் கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒற்றுமைக்காக...

4) திருமதி. மெர்லின், திருமதி.பாக்கியா, திருமதி.திலகவதி மகேஷ், திருமதி.வைலட், திருமதி. சுதா, திருமதி.பிரியா சுதிர், திருமதி.புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) உயர் கல்வி பயின்று வரும் நம் பிள்ளைகள் கி.ஃப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜாஷ்வா மேத்யு, ஷெர்லி ஜூடியா, டிரிசியா லவ்ஸ்லி, ஜாய்ஸ் கிறிஸ்டினா, ஜோ.ஃ.ப்னா, ஜெனிபர், கி.ஃ.ப்ட்லின், சிந்தியா பிரகாஷ் ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட... 10, 11 மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்காக...

6) திரு. பால் நந்தகோபால், திருமதி. சுந்தரிபாய், திருமதி. ரூபவதி நோபிள், திருமதி. புஷ்பா, திருமதி. ஜெயா சாமுவேல், திரு. அப்பன் டேவிட், திருமதி. ஜரீன் வாக்கர், திருமதி. எஸ்தர், திருமதி. ஃ.பிளாரன்ஸ் ராஜமணி, திரு. பி.ஹெச். ஜெயச்சந்திரன், திருமதி. எபனேசர், திரு. பிலிப், திருமதி. ஞானரத்தினபாய், திருமதி. தங்கம் ஜோன்ஸ், திருமதி. மேரி கிரேஸ் திருமதி. வசந்தா அன்பன், ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திருமதி. சுகிர்தா சின்னதுரை, திருமதி. மேரி தேவதாஸ், திருமதி. வனஜா ஹெர்பர்ட், திருமதி. ரூபி ஜாண்சன், திருமதி. மெர்சி தனராஜ், திருமதி. சார்லெட் டேவிட், திருமதி. ஜெஸி ஜெயக்குமார் ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

8) நமது ஊழிய ஆதரவாளர்களான டாக்டர். எவாஞ்சலின் ஜோன்ஸ், திருமதி. வைலட் கிறிஸ்டோபர், திருமதி. கிரிசெல்டா செய்லர், திருமதி. கலையரசி செல்வராஜ், திருமதி. நிறை மதி ஜாண்ஸன், திருமதி. சுவர்ணலதா அற்புதராஜ், செல்வி. ஷைனி, திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு.எஸ்.ஜே.பி. ராஜா, திரு.அசரியா ஞானதாஸ் ஆகியோருக்காக, அவர்களது குடும்பங்களுக்காக...

# வேதாகம போட்டி-147 (உன்னதப்பாட்டு)

## சரியான விடைகள்

1. காகத்தைப்போல் உன்:-5:11
2. திராட்சரசம் உன்:-1:2
3. கிச்சிலி மரம் உன்:-8:5
4. சகலவித அருமை கனிகள் உன்:-11:3
5. திராட்சரசம் உன்:-4:10
6. சாலோமோனுக்கு உன்:-8:12
7. இரண்டு உன்:-6:13
8. நேசம் உன்:-8:7
9. நேசமே உன்:-2:4
10. மணவாளி உன்:-4:12
11. ஆத்தும நேசரை உன்:-3:2
12. சாலோமோனின் இரதம் உன்:-3:9,10
13. ஈ - கன்னியர் உன்:-6:8
14. ஈ - கதவு-துவாரம் உன்:-5:4
15. இ - சாலோமோனின் மஞ்சம் உன்:-3:7
16. ஆ - சாலோமோன் உன்:-1:1
17. நேசர் உன்:-5:10
18. சாலோமோனுக்கு உன்:-3:11
19. திராட்சத்தோட்டங்கள் உன்:-2:15
20. நேசம் உன்:-8:6

## CONTACT DETAILS AND BANK DETAILS OF OUR MINISTRIES

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**

**CALL**: 9962924900/9789914464.

**WHATSAPP:** 9789914463/7871676100

**E-MAIL**: ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com

**POSTALADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93.

**WEBSITE ADDRESS:** www.ratchippu.in/ratchippu.in

**BANK DETAILS FOR SENDING OFFERTORY**

**NAME:** DHARMARAJA SJD.

**S.B.ACCOUNT NO**: 601071548.

**BANK:** INDIAN BANK,

**BRANCH:** NESAPAKKAM BRANCH

**IFSC CODE:** IDIB000N122.

**BANK ADDRESS:** K.K.NAGAR, CHENNAI-78.

**GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:**

REV. DHARMARAJA SJD: 9789914463

# சாம்பல் புதன் பாரம்பரியம்

இரவும் பகலும் 40-நாள் வனாந்தரத்தில் உபவாசித்த இயேசுவின் மாதிரிப்படி (மத் 4:1-11, மாற் 1:12-13, லூக் 4:1-13) கிறிஸ்தவர்கள் கடைபிடிக்கும் 40-நாள் உபவாசத்தின் தொடக்க நாள் 'சாம்பல்-புதன்' ஆகும். தபசுகாலம் எனப்படும் இந்த தவக்காலத்தின் முடிவுநாள் 'புனித-சனி' ஆகும்.

கத்தோலிக்க திருச்சபையார், முந்தைய ஆண்டு குருத்தோலை ஞாயிறன்று வழங்கப்பட்ட குருத்தோலைகளை எரித்து சாம்ப லாக்கி, கோவிலில் புனிதப்படுத்திய அச்சாம்பலை தவம், சுய -வெறுப்பு மற்றும் மனமாற்றத்திற்கு அடையாளமாக சாம்பல்- புதன் அன்று நெற்றியில் பூசிக்கொள்வர். அவ்வாறு பூசும்போது, குரு, ''மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்'' (மாற் 1:15) ''மனிதனே, நீ மண்ணாய் இருக்கிறாய். மண்ணுக்குத் திரும்பு வாய்'' (ஆதி 3:19) போன்ற திருவசனங்களைக் கூறுவார்.

Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 10th February 2023.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.

# செய்தித்துளிகள்

1. உக்ரைன்-ரஷியா இடையிலான போர் 11 மாதங்களாக நீடித்து வரும் நிலையில், பிரான்ஸ் மற்றும் அதன் நட்பு நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராக போரில் பங்கேற்காது என்று பிரான்ஸ் வெளியுறவுத் துறை அறிவிப்பு.

2. இந்தியாவில் கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவாக ஒரே ஆண்டில் (2022) 165-மரண தண்டனைகளை நாடு முழுவதும் உள்ள விசாரணை கோர்ட்டுகள் விதித்துள்ளதாக தேசிய சட்ட பல்கலைக்கழகம் தகவல்.

3. நெல்லை, கோவை, குமரி, தேனி, தென்காசி, விருதுநகர், திருவாரூர், மாயவரம், பெரம்பலூர், கிருஷ்ணகிரி, விழுப்புரம் ஆகிய 11-மாவட்ட கலெக்டர்கள் மற்றும் ஐஏஎஸ் அதிகாரிகள் பணி-மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

4. தீப்பெட்டி தொழிலை நம்பியுள்ள 6 லட்சம் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் ‘லைட்டர்’ இறக்குமதிக்கு தடைவிதிக்க வேண்டும்மென தமிழ்நாடு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் கோரிக்கை.

5. 14-நாட்டு வீரர்கள் பங்குபெரும் ‘சென்னை ஓபன் ஏ.டி.பி. சேலஞ்சர்-100’ ஆண்கள் சாம்பியன்ஷிப் போட்டி 4-ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் சென்னை நுங்கம்பாக்கத்தில் பிப்-12முதல் 19ம் தேதிவரை நடைபெறுகிறது.

**Posted on: 10th Februjary 2023**

**To**

If undelivered Please return to:

**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93 TAMIL NADU SOUTH INDIA

Owned & Published by: S.J.D. Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.